




ஓலை 186| ஓசை 309| ஆகஸ்ட் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிஞர் தங்கம் மூர்த்தி

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

## பொருள்

அன்பு இல்லாதவர்கள் எல்லாவற்றையும் தமக்காகவே வைத்துக் கொள்வார்கள். அன்புடையவர்கள் தங்கள் உடலையும் பிறருக்காக அர்ப்பணிப்பார்கள்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## யாரோவாகிப் போன அவள்

பாவகை : எண்சீர் மண்டிலம்

முத்தமிழும் செந்தமிழும் பைந்தமிழும் போல,
முகிழ்த்திருக்கும் நூறுதமிழ் சுவைமறந்து, இன்று
பித்தரென எந்தமிழர் தமிழ்ச்சிறப்பை உணராப்
பிழைப்பாலே பொதுவறிவை இழந்துவிட்டு நாளும்
முத்திருக்கக் கிளிஞ்சலினைப் பற்றுகிற பாங்கில்
முடமாகி அங்கிலமும் பிறமொழியும் ஏற்று
நித்தமிங்கே பிழைப்புக்காய் கற்கயாரோ வாகி
நசிந்துபோன அவள்என்றன் தமிழ்த்தாயே அந்தோ!




தமிழராகப் பிறந்துவிட்டு தமிழராக வளர்ந்து
தமிழராகத் தமிழ்க்கல்வி கற்கமட்டும் வேற்று
மொழியினராய் நடிக்கின்ற தமிழரெல்லாம் வீணாய்
தமிழ்க்கற்றால் வேலையுந்தான் வாய்க்காதே என்று
அமிழ்தமொழி தமிழ்தன்னைப் புறந்தள்ளும் இழிவு
அறிவிளிகாள் கூற்றாலே எந்தமிழர் தாயும்
தமிழர்க்கே யாரோவா கிப்போன அவள்தான்
தனிச்சிறப்பு செம்மொழியாள் என்பதையும் மறந்தர்!





மயில்சாமி அண்ணாது ரையும்அப்துல் கலாமும்
மாத்தமிழைக் கற்றுத்தான் அறிவியலில் வென்றர்,
வெயிலில்தான் நிழலருமை தெரியுமென்பர்; வேற்று
வெயில்மொழியால் நிழல்குளுமை தமிழருமை தெரியா
வயிற்றுப்பி ழைப்புக்காய்த் தாழ்ந்துபோன தமிழா
வழிமாறி போகாமல் வளத்தமிழை ஏற்பாய்,
உயிரற்றப் பிண்டமான தமிழராலே இன்று
யாரோவா கிப்போன அவள்தான்தாய்த் தமிழே!

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# பரிணாமக் கோட்பாடு

பாவகை : கட்டளைக் கலித்துறை. (தலைமுறைக் கொள்கை.)

கற்றே உழைத்தால்
கடமையை ஆற்றிக்
களித்திடலாம்.
சற்றே தயங்க
சடுதியில் வீழ்ந்தே
சலிப்புறலாம்.
அற்றம் விலக்கி
அறிவினால் எம்பல்
அதர்வெனவே
அற்றார் அணைத்தே
அனுக்கம் அகற்றல்
அறவழியே.



கவிஞர் செ. கலைவாணி


# வில்லும் கணையும்

ஆதிகுகைக்குள்
விழுந்த இருட்டாய்
சலனமற்றிருக்கின்றன
எனது கணைகள்.

அதன் புறப்பாட்டின்
நோக்கமும் வேகமும்
எப்போதும் என்னிடத்திலே.

யாரையும் எதையும்
குறி வைத்துத்தாக்க
அதை நான் ஏவிவிடுவதில்லை.

நிர்வாணத்தை உடுத்தியபடி
இப்போதும்
வெட்கித்தான் நிற்கிறது
கனவுகளுடன் எனது வில்.




கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

ஊசியொன்று தன்வேலை செய்ய வேண்டுமென்றால்
மீச்சிறு காதொன்று வேண்டுமென்றோ அதற்கு;
காதறந்த ஊசியெதற்கும் பயன்படாததுபோல் நம்மைத்தூக்க
காலன்வரும் போதுகாசுபணம் காப்பாற்றபயன் படாதுநமக்கு;
கற்றவிந்தபாடத் தால்முற்றும் துறந்ததுறவி பட்டினத்தார்
கல்லாப்பெட்டியில் அடைபட்டிருந்த பொன்பொருளை எடுத்து
கணக்கின்றியேழை எளியோர்க்கு வழங்கச்சொன்னார் கணக்காளரிடம்;
கணக்காளர்பிழை செய்கிறாரென்ற குற்றச்சாற்றைப் பட்டினத்தார்
குடும்பவுறவுகள் சுமத்திடவரசனும் சிறையிட்டாரந் தகணக்காளரை;
கண்ணுதல்கடவுள் அருள்பெற்ற பட்டினத்தாரவரை சிறைமீட்டவந்த
கணக்காளரின் திருப்பெயர் சேந்தனார் என்பதாமே!

திருவாரூரில் இருந்துசேந்தனார் தியாகேசனுக்கு திருத்தொண்டாற்ற
திக்கெட்டும் சேந்தனார்புகழ் பரவவேண்டி அவரில்லம்தேடி
தியாகேசன்வந் தார்திருவாதிரை நன்னாளிலொரு சிவத்துறவியாக;
திருநாளில் வந்திட்டவிருந்தினர் உண்டுகளித்திட ஈந்தாரவர்
திருவாதிரைக்களி யைவதையுண்டது அனைவரும் அறிந்திடவே
திருக்கோயிலில் களியோட்டிய மேனியனாய்ச்சிவம் காட்சியளித்தனரே!

மார்கழிதிருவா திரைநன்னாளில் தியாகேசன்தே ரேறிவுலா
வருவதுண்டு; அப்படிவந்த வொருநாள் சேந்தனார்வாழிடம்
அருகில்வந்து ஆடாமலசையா மல்நின்று போனதுயாரும்
அதனையிழுத்து நகர்த்திடவியலா நின்றபோது அசரீரியொன்று
அனைவரும்கேட்க வுரைத்ததுசேந்தனார் பாடினால்மட்டும் நகருமென்றே!

சேந்தனார்தயக்கம் இன்றிப்பாடினார் ஆழித்தேரூர்ந் தவீசனார்மீது
சரித்திரத்தில் எக்காலமும் வாழ்ந்திடும் திருப்பல்லாண்டை;
திருப்பல்லாண்டைக் கேட்டுமகிழ்ந்த தியாகேசனின்மனம் குளிர்ந்ததாலே
திருவீதியுலா வந்தவாழித்தேர் யாருமிழுக்கா மலேயோடி
தேர்முட்டி வந்தடைந்து சேந்தனாரைச் சிறப்பித்ததே!
திருவிசைப்பாவும் பாடியருளிய சேந்தனார்தன் குடும்பம் வாழ
மரங்களைவெட்டி விற்றுவாழ்வு நடத்தினாலும் மகேசன்மகனாம்
குமரக்கடவுளை வழிப்பட்டு சிவனார்திருவடி அடைந்தனரே!



திருப்பல்லாண்டு: 12வது பாடல்.

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# எனது இறக்கைகள்

பிறந்ததும் வளர்ந்ததும்,
எனது தாயின் கூட்டில்தான்.
எங்கெல்லாமோ பறந்தலைந்து,
இரை தேடி வந்து,
என் பசி போக்கி வளர்த்தவள்.

உலகின் மாயை பற்றி,
நம்பிக்கைத் துரோகம் பற்றி,
ஒருபோதும் கற்றுத் தந்ததில்லை.
இறக்கை முளைக்க,
தெத்தித் தெத்திப்
பறந்து பழகியபோதுகூட,

உலகம் பொல்லாதது;
கவனமாய்ப் பற என்று
என்னை எச்சரித்ததில்லை.

பறக்க முடிந்தபோது எனக்கு,
ஓராயிரம் சிறகுகள் இருப்பதாய்
பெருமிதம் கொண்டு
சுற்றித் திரிந்ததில்,
துணையெனத் துணிந்து,
அவன் கூட்டினில் அடைந்தவள் நான்.

மீண்டும் பறக்க முடியாமல்,
தப்பிப் போகாதபடியாய்,
எனது இறக்கைகள் கத்தரிக்கப்பட்டு,
தும்புக் குஞ்சம் கட்டி,
இந்தப் பெண்புறாவின் பறத்தல் முடக்கப்பட்டது.

இப்படித்தான் பல பெண்கள்
உரிமைகள் மறுக்கப்பட்டு,
குடும்பக் குலவிளக்குகளாய்.



கவிஞர் சம்மாந்துறை மஷூறா, இலங்கை

# கற்பனையின் விளைச்சல்

கற்பனைகளின் பதிவில்,
கனவுலகின் விளைச்சலே.
எட்டிடாத உயரங்களின்
எதிர்பாராத சிங்காரமே.

மரபு வாழ்விலும்,
மனிதப் பண்பிலுமாய்.
வானவில்லின் சிதறல்களோடு
வாய்விட்டே சிரித்திடுமே.

இன்பம் பயக்கும்
இனிமையான ஊற்றாய்.
ஊதற்காற்றின்
ஊசி முனையாய் சிலிர்த்திடுமே.

காண்பவர் கண்ணிற்கு,
காதலின் சிற்ப வடிவமே.
மனித மாண்புகளின் விளிம்பையும்
மனங்களில் அருவியாக்கிடுமே.

இயங்கும் இசையும்
இன்னிசையாய் பொங்குமே.
காதலுக்குக் கைகாட்டியான,
காவலாளியான இரசனையே.

அன்பின் வெள்ளத்தின்
அபிநய சரஸ்வதியே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# கொடுங்களம்

கூத்தாடும் கெடுமதி ஒன்னார் பெருந்திரள்,
கூளிப் படியெடுத்து ஆடும் கொடுங்களம்.

களிறு புகக் கெடும் கழனிபோல,
கண்ணறு இல்லா நிலம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# மருதநிலக் குடிகள்

வனம் விட்டு இறங்கி,
ஏழையின் பாடுகள் சுமந்த
வறண்ட நிலம் நனைத்தது
கோடை மழை!

தார் குச்சி கிழித்த
வடு மறையும் முன்னே,
நெல் மூட்டை சுமக்க
நுகத்தடி தாங்கி,
ஓடை மணலில் ஊர்ந்து கடக்கிறது
செவலைக்காளை!

சிட்டுக்குருவிகளின் கூடு சுமந்த
நிறை வயல் முழுவதும்,
அரவம் இல்லாமல்
அடங்கிப் போனது
வறட்சிப் பிடியில்!

தட்டான் பறந்த நிலம் முழுவதும்,
ஓணான் நகர்ந்த கருவேலங்களால்
செழித்துச் சிரிக்கையில்,

குதித்தும் நுரைத்தும்
புரண்டு ஓடிய
ஓடை, வாய்க்கால்
முறிந்து போனது.

அறியாமலே
கணினி மோகத்தில்
கால் பதித்து நிற்கிறது
மருதநிலக் குடிகள்!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# இசை

மழை நேரங்களில்,
சூடான தேநீரின் அரவணைப்பில்
இசையின் ருசி இனிமையாய்.

எல்லாப் பயணங்களும்
இசையின் பாதையில்
நீண்டு நிற்கும்
நிழலான நிஜங்களாய்.

காதுகளும் இசையும் என்றும்
இணைபிரியாத
தேன்நிலவுத் தம்பதிகளாய்.

இதயத்தின் ஓரத்தில்
இசையின் சிம்மாசனம்,
துருப்பிடிக்காத
துடிப்புகளின் இன்னிசையாய்.


இசை என்பது
இரவின் மடியில்,
நிலவின் தாலாட்டில்
நிம்மதியாய்.

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி



அகர முதல

# தளராத எண்ணம்



பேராசை இங்கு
நிராசையாக மாறும்போது,

உன்னைப் பார்க்கும் கண்கள்
உன்னை வெறுக்கும்போது,

செய்யாத குற்றம் ஒன்றை
நீ செய்தாய் என்றே
உன்னையும் பழி சொல்லும்போது,

என்ன செய்வாய், மானிடா?

போலி உலகம்
நீ என்று கூறும்;
உன்னை வீழ்த்தும் மனம்
மௌனம் காக்கும்.

உன்னை நீயே நம்பும் பட்சத்தில்,
உனக்காக இருக்கும்
உன் தன்னம்பிக்கையே!

விடாமுயற்சி
பரிணாமம் எடுக்கும்போது,
சாதனை என்பது தங்காது;
அது உன்னிடம்
வரும் சிறப்பாகும்.

மற்றவர் பார்க்க
வாழும் நிலை
உனக்கு இல்லையென்றால்,
நீயும் ஒரு சாதனையாளனே!

பக்கம் சொல்ல
எழுத்துகள் இல்லை;
அனைத்தையும் செதுக்கச் சொன்னார்
சிற்பமாக.

சாலைகள் நெடுகே இருக்கும்
எளியவரை
அதனைப் பார்த்துச் செல்லும்
செல்வந்தர்.

உன்னைத் தீண்ட நினைக்கும் உலகம்,
அனைத்துக்கும் நீ இடும் முற்றுப்புள்ளி
உன் விடாமுயற்சியே!

கவிஞர் ஸபா நளீர், கண்டி (இலங்கை)

# மனதின் மறைவறைகளில்



மனதின் காயங்கள்,
மறைந்திடாத வடுக்கள்.
எதிலும் தயக்கம்,
எண்ணமதில் சுணக்கம்.

ஆசைகள் புதைந்திட,
ஆர்ப்பரிக்கும் நீர்க்குமிழிகளாய்.
அடைகாக்கும் கூடாரத்தில்
அனைத்தும் அடைக்கலம்.

மறைத்த வலிகளில்
மறைந்த கண்ணீர்த் துளிகள்.
மௌனத்தில் கரைந்திட்ட
ஆற்றாமையின் விசும்பல்.

எழுதிய நாட்குறிப்புகளில்
தூசுபடிந்த பக்கங்கள்.
விழியோரங்களில் கண்ணீர்,
விளம்பிட இயலாத சோகங்கள்.

முகமூடி அணிந்திட்ட
அறிந்திடாத முகங்கள்.
இதயமொரு இரகசியச் சுரங்கம்,
வெளிப்படுத்திட இயலாத அரங்கம்.

புதையுண்ட ஞாபகங்கள்,
புரையோடிப் போனதென்ன சாபமோ!
காதலை மறைத்த உள்ளம்,
ஆசைகளை மறந்த உலகம்.

ஏளனத்தில் ஏமாற்றமாகி,
ஏங்கியே தவித்த நாட்கள்.
மருந்திட்டு ஆற்றிட
மனமில்லாத உறவுகள்.

பகிர்ந்திட இயலாது போய்,
பாழான எண்ணங்கள்.
மனதின் மறைவறைகளில்
மாய்ந்திட்ட ஓராயிரம் கனவுகள்.

காத்திருந்த தருணமெல்லாம்
கானல்நீராய்ப் போய்விடுமோ?
கனவுகள் துளிர்த்திடுமோ?
கனிவாய் மாறிடுமோ?

நம்பிக்கை விதையது
முளைவிட்டு வளரட்டுமே!

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# விடாமுயற்சி

தனியாக நின்று வெற்றி பெற
பல வழிகள் இருப்பினும்,
தன்னைப் பாதுகாத்து வரும்
ஒரு நபரின் அன்பின் வழியில்
வெற்றி பெற்று,
அவருக்குப் பெருமை சேர்த்து
உயர்ந்து நிற்பது
மிகச் சிறப்புடையது.

எத்தனை உறவுகள்
கீழே விழுந்தாலும்,
முயற்சி செய்து கொண்டே
இருக்கிறார்கள்.

அதையெல்லாம்
பொருட்படுத்தாமல்,
இலக்கை நோக்கி
ஓடிக் கொண்டேயிரு.

உனது வெற்றியை
அடையும் வரை,
உனக்கான நேரம்
வரும் வரை காத்திரு.

மனதைத் தளர விடாமல்
இருப்பதே
உண்மையான வெற்றி.



கவிஞர் மா. மோனிஷா

# தீர்ப்பெழுத வேண்டாம்



நேசிக்க வேண்டாம்;
முதலில் நம்புங்கள்.
தூற்ற வேண்டாம்;
முதலில் விசாரியுங்கள்.

கோபிக்க வேண்டாம்;
கொஞ்சம் நிதானியுங்கள்.
பேச வேண்டாம்;
ஒரு கணம் மௌனியுங்கள்.

வெறுக்க வேண்டாம்;
ஒருமுறை புரிந்துகொள்ளுங்கள்.
தீர்ப்பெழுத வேண்டாம்;
தீர உண்மையை அறியுங்கள்.

எதற்கும் முன்
கொஞ்சம் யோசியுங்கள்.
எப்போதும்,
எத்திசையிலும் அவதானியுங்கள்.

பல தவறுகளைத்
தணிக்கை செய்யலாம்.
உறவுகள் கொலையாகாமல்
பாதுகாக்கலாம்!



கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# புத்தகம் பேசினால்

மனிதா! மனிதா!
என்னை மறந்தது சரியா?

ஆசையைத் துறந்து
புத்தனாவது நியாயம்.
அறிவைத் துறந்து
எத்தனாவது அநியாயம்.

என்னை உனக்குள்
கிடத்தும் போது ஏணியாகிறேன்.
அறியாமையில் இருந்து
அறிவுக்கு கடத்தும் போது
தோணியாகிறேன்.



என்னை எழுதுபவன்
எனக்கு முதல் தாய்.
என்னை எடுத்து
படிப்பவன் இரண்டாம் தாய்.
என்னைப் படித்து வாழ்வைப்
பின்பற்றுபவன் மூன்றாம் தாய்.
என்னை வரிசைப்படுத்தி,
அமரவைத்து பாதுகாக்கும்
நூலகம் நான்காம் தாய்.

நான் எட்டுத்தொகை மட்டுமல்ல,
உன் அறிவிற்கும் எட்டும் தொகை.
நான் கலித்தொகை மட்டுமல்ல,
உன் கவலைகளையும் கழிக்கும் தொகை.

நான் பத்துப்பாட்டு மட்டுமல்ல.
உனது தலைமுறையைப்
பாதுகாக்கும் சொத்துப்பாட்டு.

நான் முன்னிலை அல்ல;
உன் வாழ்வின் முதல் நிலை.
நான் படர்க்கை அல்ல.
உன் முன்னேற்றத்தில் படரும் கை.

நான் புறநானூறு மட்டுமல்ல;
உன் தோல்வியைப்
புறமுதுகாட்டி ஓடச் செய்யும்
புயல் நானூறு.

நான் சிலப்பதிகாரம் மட்டுமல்ல;
உன்னைச் சீர்படுத்திச் சிறப்பாக்கும்
சிந்தனை அதிகாரம்.

நான் குறிஞ்சிப்பாட்டு மட்டுமல்ல.
உன் குறையைக் குறிலாக்கி,
நேர்மையை நெடிலாக்கும்
குணப்பாட்டு.

நான் ஐங்குறுநூறு மட்டுமல்ல;
உன் ஐயத்தைக் குறுக்கி,
அறிவைப் பெருக்கும்
அதிசய நூறு.

என்னைப் படி;
ஏற்றத்தை எட்டிப் பிடி.
அறிவுக் குவளையில் ஊற்றி,
அனுபவ ரசம் குடி.

கவிஞர் முனைவர் அ. ச.மு. முனியாண்டி

# வெஃகாமை

1.
நடுநிலை தவறி பிறர் பொருளைக் கைப்பற்ற எண்ணாதே;
படுகுழியில் தள்ளி பல குற்றங்களைத் தந்திடுதல் திண்ணமே.

2.
நடுவுநிலையை உடைமையாகக் கொண்டோர் எவரும்,
கொடுமை தரும் அறமல்லா வினைகள் புரியாது இருப்பரே.

3.
நிலையான இன்பத்தை விரும்புவான் என்றுமே,
நிலையில்லா இன்பம் கருதி அறம் நீங்கியவற்றைச் செய்யாரே.

4.
கைமேல் பலன் பெற
பிறர் பொருளைக் கவர்ந்திடவே,
ஐம்புலன் வென்ற அறிவுடையோர் விரும்பாரே.



5.
கற்றவன் ஒருவன் பிறர் பொருளை விரும்புவான் எனில்,
பெற்ற அறிவால் யாது பயன்? சொல்க.

6.
அருள் ஒழுக நிற்பவன் பிறர் பொருளை விரும்பினால்,
இருள் சூழும் வாழ்க்கை அவனை விரும்புமே.

7.
உழைப்பால் பெற்ற செல்வமே உயர்ந்தது; தெரிவீர்.
உழையாமல் உற்ற செல்வமே சிறப்பாகாது; அறிவீர்.

8.
தான் பெற்ற செல்வம் நிறைவாக இருக்க வேண்டின்,
யாண்டும் விரும்பற்க மாற்றான் செல்வத்தைக் கவரவே.

9.
பிறர் பொருளை விரும்பாது அற வழியில் நடப்போரிடம்,
சிறப்பான திருமகளே முகவரி கேட்டு நடந்திடுவாள்.

10.
பிறர் பொருளை விரும்பானின் வீரம் வெற்றி தரும்;
திறம் திரிந்து மாற்றான் பொருளைப் பற்றினால் அழிவே நேரும்.

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

மதுரையும் நெல்லையும் குமரியும்
வெள்ளாற்றுத் தென்பகுதியின்
எல்லையாமே!
தென்மூத்தக்குடியாம் எம் குடியின்
குமரிக்கண்டம் தோன்றிய ஆதி
சந்ததியரே யாம் என்போமே!
"முன்னீர் விழலின் நெடியோன்
நன்னீர் மணலினும் பலவே"
என்றுரைக்கும் தொல்காப்பியமே!
முத்துக்களும் சங்குகளும் இன்னும் பலவும்
இங்கிருந்தே உலகமெங்கும் சென்றனவே!
வாணிகமும் வியாபாரமும்
எமக்கு வளம் சேர்த்ததுவே!
பொன் முத்துக்களால் அலங்காரம்
பெற்றதுவே எம் கோட்டை வாயில்களே!
பெண்ணினத்தை முடி சூட்டி பெருமை சேர்த்து
தரணியலாம் புகழ்மணக்க
போர் புரிந்து வாகை சூடிய
கொற்கையனும் சுந்தரனும் வீரன் கட்டப்பொம்மனும்
கல்விக்கு சிறப்பு செய்த நெடுஞ்செழியனும்
தலைநகராம் தென்மதுரையில்
சங்கம் வைத்து உன்னை வளர்த்த
மன்னாதி மன்னர்களாம்
உயர் பாண்டியர்களின் பெருமையை
என்னென்று பாட்டில் வைப்பேனோ! அவர் புகழ்
வாழிய வாழிய வாழியவே என்று
ஞாலமெல்லாம் முரசொலிக்க
எங்ஙனம்தான் எடுத்தியம்புவேனோ!
எனக்குக் கூறிடுவாய் எம் தமிழே!




கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

# உறங்காத நினைவுகள்

கரம் பிடித்து எனை அணைத்த
என்னரசன் வெளிநாடு சென்றது ஏனோ?
குளிர்காலம் குதூகலிக்க, குமரியின் இதழ்
தவிக்க நீ போனது நியாயமோ?

ஈருடல் ஒருடலாய் சில நாட்கள்,
சிலிர்க்க மனதை மகிழ்வித்தது
கண்ணாமூச்சி ஆட்டமோ?
கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டு,
என்னைத் தவிக்கவிட்டு ஓட்டமோ?

என் வாட்டம் புரியாதா உனக்கு?
வாய்விட்டுப் பேசிச் சிரித்து
நெடுங்காலமாயிற்று.

திருமணம் முடித்து ஈராண்டுகள் கடந்தாயிற்று;
துயரம் சூழ்ந்த வாழ்வு ஆயிற்று.
கழுத்தினில் நீ கட்டிய தாலி,
துணையின்றி ஏங்கி வாடிப்போயிற்று.

என் தங்கையும் திருமணம் முடித்து,
இரு குழந்தைகளை ஈன்றெடுத்தாள்.
எனக்கு அக்கம் பக்கம் ஏச்சு;
"உனக்கு இன்னும் குழந்தையில்லையா?" என்ற பேச்சு.

கணவன் நீ என்னோடு இருந்தால்,
வருமா எனக்கு இந்த ஏச்சுப் பேச்சு?
காலம் நகர்ந்து போச்சு, கண்ணா;
காதலியைக் கரம் பிடித்ததை மறந்துபோனாயா?

கள்ளமில்லா என் வெள்ளக் கண்ணா,
வேலை செய்தது போதும்; வா!
மீண்டும் காதல் பாடம் படிப்போம்;
பறந்து விரைந்து வா, கண்ணா!

நமக்கான விடியலை மீட்போம் வா;
நம் இரு குறைகளைத் துடைப்போம் வா.
தூரமாக இருந்தது போதும், அன்பே;
துறவி வாழ்வை முடிக்க வா.



கவிஞர் பானு திப்ரி, சாய்ந்தமருது (இலங்கை)

# வெள்ளை காகிதம்



என்னவனுக்கு ஒரு காதல் மடல்.

அமைதி பூண்ட வெற்றுப் பக்கமாய்.
என் கையில் கிடக்கிறது வெள்ளை காகிதம்.
வார்த்தைகள் தேடி பேனா முனையும்
தயங்கித் தயங்கித் தவித்துப் போகிறது.

காகிதத்தின் வெண்மை உனது தூய்மை,
அதில் சிந்தும் மை என் கண்ணீரின் தூறல்.
காதலின் மொழியை எழுதத் தொடங்கினால்
கைகளோ நடுங்கி தடம் மாறுகிறது.

உன்னோடு வாழ்ந்த நொடிகளின் நினைவுகள்—
நெஞ்சக் கூட்டிற்குள் புயலாய் வீசுது.
அருகில் நீ இருந்த அந்த நாட்களோ
சொர்க்கத்தின் கதவைத் திறந்து வைத்தது.

இன்று நீயில்லா இந்த நொடிகளோ
நரகத்தின் வலியைத் தினமும் தருகிறது.
பிரிவின் துயரம் தொண்டையை அடைக்க,
பேச முடியாமல் பேனா அழுகிறது.

இரவு வந்தாலே இருளின் போர்வையில்
தனிமையின் கொடுமை என்னை விழுங்குது.
சுவர்களெல்லாம் உன் முகத்தைக் காட்ட,
மூச்சுக் காற்றும் உன்னைத் தேடுது.

ஏக்கத்தின் வலிகள் நெஞ்சைப் பிழிய,
எந்தன் உள்ளம் உனக்காய் பரிதவிக்குது.
எத்தனை தூரம் நீ தள்ளிப் போயினும்
எந்தன் காதல் குறைவது இல்லை.

உள்ளத்தின் வேட்கை,
உன்னை அடையும் வரை
இந்த உயிர் உனக்காய் மட்டுமே துடிக்கும்.

என்றோ ஒருநாள் நீ இதைப் படித்தால்.
எந்தன் நெஞ்சின் துடிப்பு உனக்குப் புரியும்.
காலம் கடந்து என் உயிரும் பிரிந்தாலும்,
இந்த வெள்ளை காகிதம் நம் காதலைப் பேசும்.

கவிஞர் நிஸ்ரினா மதீனா, மாத்தளை

# மௌனம் கொண்ட புத்தகங்கள்

மௌனம் கொண்ட புத்தகங்கள்,
சந்திக்கும் ஆசான்கள்.
பாடங்களைச் சத்தமாய்,
அதிசயமாய் விருந்து படைக்கின்றன!


பேசிடாத ஊமையாய்
பேதை அவள் இருப்பாள்;
வியாபித்து எங்கும்
வித்தைகள் பல புரிந்திட,
ஆசானை மணந்தாள்!

பாடங்களைச் சத்தமாக
விருந்துபடைத்து நிற்கிறான்
வித்துவான்!

"மௌனம்" புத்தகங்களாக
விரித்துரைப்பவன் ஆசானாகி
விந்தை கண்டது பாரே;
அதை வியந்து நிற்கிறாய் பாரீர்!

வாசிப்பு மனிதனுக்கு அவசியம்;
நேசிப்பு இருக்க வாசிப்பில்
இனிப்பு காண்போம் பனுவலில்.
புசிப்பு கண்டே போதிப்போம்
நாமும் நூல்களை!

தேடி ஓடிடுவோம்;
தேனாய் அறிவு விருந்து படைக்கும்
அறிவு நூல்களை.



உளத்துக்கும் உடலுக்கும்
நன்மையைக் காண்போம்!
புத்தகங்களால்
மாற்றிய நல் மனிதனாய்
வாழ்வோம் என்றுமே!

கவிஞர் திருமதி. கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# இரை தேடும் பறவைகள்

தேவைக்குத் தேடலோ,
திமிரில்லாத வாழ்க்கையோ.
வைகறையை அணைத்து,
வானிலே சாலைப் பயணமோ?

இலக்கை நோக்கிய
பயணத்தில் தடைகள் உண்டா,
பறவைகளே?

நேர்த்தி என்பதன் சொல்லுக்கு
உன்னிடம் விளக்கம்
கற்றுக்கொள்ளலாம்.

விடாமுயற்சிக்கு உன்னிடம்
பயிற்சியும் பெறலாம்;
பகிர்ந்துண்பதில் பாடமும்
கற்கலாம்.

அந்தியின் அழகோடு உங்களின்
சிறகுகளின் அலைவரிசை,
ஒரே நேர்க்கோட்டில்
ஒற்றுமையின் வண்ணம்
கூடிவாழும் கூட்டமாய்.

போதுமென்ற பண்பும்,
பொய்யில்லாத நேசமும்,
அழகான காதலும்.



இயற்கையை உணர்ந்து,
பாதுகாப்பின் பாதைகளில்,
இணக்கத்தோடு வாழும்
இரை தேடும் பறவைகள்.

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி, நாகப்பட்டினம்



கிளை தாங்கும் பறவைகளைப் போல,
நிலை தாங்கிக்கொள்ள
பொறுமையொன்று வேண்டும்.

வேண்டுதல்கள் கூட
வேலையற்ற பொருளற்றவையாக
கண் மறைந்து காணுகையில்,
வலி தாங்க வழி தேடுதல் கூட
வேண்டுதலில் தான் நிற்கிறது.

நூலறுந்த பட்டங்களை
கைவிட்டு விட்டு,
காற்றோடு தூரமாகிப் போனதைப் பார்த்தொரு
தவிப்பைத் தடுத்திட
யாராலும் முடிவதில்லையே.

குறைந்தாங்கும்
குசுகுசுக்கும் மனிதர்களுக்குள்
பிரவேசித்து மனம் தப்புதல்
ஒன்றும் அவ்வளவு எளிதினில் இல்லை.

அலுத்துப் போகும் துரதிர்ஷ்டமாகும்
விதியின் அகோரங்களை
எடுத்தெறிந்து போக முடிவதில்லை.

விடியலொன்றுக்குள்
விருந்தோம்பலாக விடிந்திடாதோ?
விடிவெள்ளிப் பொழுதும்
மாற்றம் தராதோ?
தெரிவதே இல்லை.

ஏக்கங்களைப் பரிசாக விட்டு,
வழி எங்கும் வேடிக்கை காணுதல் போல,
பொறுத்திருக்கவே பணிக்கப்படுதல் கூட
கஷ்டமாகவே இருக்கும்.

எப்போதும் மாறாதோ எனும்
எண்ணம் கூட உறுதியாகிறபோது,
வலி தானே
மனமெங்கிலும்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

# மாற்றம் நம்மிலிருந்து

மாற்றம் வேண்டும் என்று
மாநிலம் முழுவதும் முழங்குகிறோம்.


ஆனால்
மாற வேண்டியது
முதலில் நாம் தான் என்பதை
ஏனோ மறந்துவிடுகிறோம்.

ஊரைத் திருத்தி,
உலகைத் திருத்தப்
புறப்படும் முன்பே,
உள்ளக் கதவைத் தூசி தட்டி,
உண்மையின் விளக்கை ஏற்றுவோம்.

பிறரின் குற்றங்களை
பெரிதாக்கும் கண்களைவிட,
தன் குறைகளை உணர்ந்து
கண்ணீர் சிந்தும்
மனமே மனிதத்தின் மகுடம்.

பாரைத் திருத்தி
பலரை வழிநடத்தப் பார்க்கும் முன்,
பண்பைத் திருத்தி,
பண்புடன் வாழப் பழகிக் கொள்வோம்.

நாம் முதலில்
நம்மை மாற்றிட முனைவோம்;
நமது உலகமும்
ஒருநாள் தானாக மாறிடும்.



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த, கலேவெல

# பிற மொழி விரும்பு

தன்மொழி ஆட்சியில் பிறமொழி விரும்பு
நிலைமொழி தமிழே வழிமொழி ஆங்கிலம்
வடமொழி இந்தி வழக்குமொழி வேறு
இணைமொழி ஒன்றை இயல்பாய் கற்றிடு.

தேசம் முழுதும் பலமொழி பேசும்
தேச மக்கள் பலரும் பலவிதம்
தேர்ச்சி அடைந்த சிலமொழி விரும்பி
தேர்ந்தெடுத்து கற்றிடு வடமொழி கூட.

பாசப் பிணைப்பிடும் ஊட்டிடும் தாய்மொழி
தவறுகள் இன்றி பேசிடு தமிழ்மொழி
மனிதர்கள் பிரிந்து வாழ்ந்திடும் மாநிலம்
மாறிடும் மொழியால் புரிவது இல்லை.

ரசனையுடன் கூடிய பேசிடும் மொழியால்
கவிதைகள் எழுதிட மொழிவளம் கூடும்
எழுதி பேசி முயன்றிட நன்றே
கற்றிட முயலு பிறமொழி யாவும்.



கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

# எதிர்பார்ப்புகள் ஏதுமற்று



ஆசுவாசப்படாத அத்தனைக்கும்
அடங்கிப்போவது அவ்வளவு
யதார்த்தமல்ல
பரிதவிப்புகளோடு ஆரம்பமாகும்
அளந்துபோன அனைத்திற்கும்
நிறமற்ற பூவைப்போல
மறைந்துபோவது தான் நலமே

நலமறியா குறிப்புகளோடு
நலமறியும் ஒற்றை வரி
சேர்த்துக்கொள்கிறது ஓர் திருப்தியை
நல்லாயிருக்கியா வார்த்தையில்
இருந்துபோகும் வாழ்க்கையில்
இருப்பதாக நினைவுபடுத்த
நல்லாஇருக்க பதிலுக்குள்

பதுங்கிவிடுகிறது
நிறமேற்றப்படாத

நிலையில்லா பூக்களின்
மனித சாயல்கள்.

கவிஞர் டோ. மெர்லின் மரியா

பரீட்சை நேரம்
கைகள் நகர்கின்றன
எழுத்துப் பிரதிகளில்

தென்னோலைகள்
விரிந்திருக்கின்றன
குடைகள்

மந்தை வழியில்
சுவடுகள் நிறைந்திருக்கும்
சாதித்தவன் வாழ்வில்

பாலைவனத் திட்டுகள்
உயர்ந்தும் பணிந்தும்
பேச்சாளன் தொனி



கையிருப்பு
அரை மாதம் தாக்குப்பிடிக்கும்
அரசு ஊதியம்

வெட்டிய மரம்
துளிர்க்கிறது
நம்பிக்கை

மடிந்த இலைகள்
நிமிர்கின்றன
ஏழைகள் வாழ்வு

பனித்துளிகளில்
மலர்கின்றன
சூரியன்கள்

கவிஞர் சேஹூ மொஹம்மது பௌஸிரா, முஸ்லிம் ஹல்லிலாவ

# வளம் வந்து சேர்ந்திடுமே!



வாழ்க்கை என்னும்
நெடும் பயணம்தான்
வாழும் முறையென்றும் அறமானால்.
வாழ்வும் சிறக்குமே
வளம் வந்து சேர்ந்திடுமே..!

அன்புகொண்ட மனமும்
கனிவான குணமும்
இதயத்தில் நிறைந்திட்டால்
வாழும் காலம் சொர்க்கமாய்
இனிமையாய் அமைந்திடுமே..!

காடு மலை ஏரிகளும்
இயற்கையின் வளங்களும்
பல்லுயிர்க்கும் பயன்தரும்.
நம் வாழ்வும் அதுபோல
பயனுற வேண்டுமே.

நேர்மை என்னும் நிலையிலிருந்து விலகாத
மனிதனின் செயல் என்றும்
பொன்னாய் அமைந்திடுமே கண்ணாய்.

கல்லும் முள்ளும் நிறைந்திட்ட
பாதைதான் வாழ்க்கையே
ஆயிரம் தடைகள் வாழ்வில்தான்
அத்தனையும் தகர்த்திடுவோம்.

நெஞ்சில் துணிவு வேண்டுமே
நேர்மை வாழ்வில் வேண்டுமே.
அன்புகொண்ட நெஞ்சினால்
அத்தனையும் வசமாகும்
வெற்றி நம்மைத் தேடி வரும்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# நட்புறவு

நண்பா!
பிரிந்து பார் - உனது அன்பு
எனக்குத் தெரியும்.
விலகிப் பார் - உனது பாசம்
எனக்குப்புரியும்.
கோபப்பட்டுப் பார் - உனது நல்லுள்ளம்
எனக்குத் தென்படும்.
யோசித்துப் பார் - உனது நேசம்
எனது எண்ணத்தில் பிரதிபலிக்கும்.
இவையனைத்தையும் நல்லெண்ணத்தில் பார் -

நமது நட்புறவு நம்மைச்
சிறப்படையச் செய்யும் வழிமுறைகள் தெரியும்.
என்றும் அன்புடன்
வாழ்வோம் நலமுடன்.



கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

# ஒரு கடிதம் எழுதலாமா...

பிரியமானவனே,
நலம் நலமறிய ஆவல்
என எழுதி,

ஒரு காதல் கடிதம்
எழுதி அனுப்பலாமா?

விழிகள் பாராமல்
இதயம் துடிப்பதை
வரிகளில் வடிக்கலாமா?

கைகோத்துப் பேசாத
காதல் கதைகளெல்லாம்,
கையெழுத்தில்
பேசி மகிழ்வோமா?

சின்னச் சின்ன
எழுத்துப் பிழைகளைக்கூட
ரசித்தபடியே,




ஒவ்வொரு வரியிலும்
உன் காதலை
வாசிக்கக் காத்திருக்கிறேன்...

எங்கோ "தபால்..." என்ற
குரல் கேட்டவுடன்,
ஓடோடி வந்து
வாசல் பார்த்து
ஏங்கி நிற்கிறேன்,

நான் அனுப்பிய
காதல் கடிதத்திற்கு
உன் பதிலை
எதிர்பார்த்து!

என்றும் காதலுடன்,

இப்படிக்கு,
உன் பிரியமானவள்.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# நிஜங்கள்

நிஜமாகவே,
நினைவால் உன்னோடு
வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

உணர்வாய்,
உருவமாய்,
எனக்குள் நீ...

உன்
உள்ளத்தைக் கேள்,
உன்னையே குற்றம் கூறும்!

உனக்காகவே இழந்தேன்,
என் எண்ணக் கனவுகளை மட்டுமல்ல
என் உள்ளக் கதவுகளையும் சேர்த்து.

என்னைப் பிடிக்காத
உன்னை நினைத்தால்
கொல்லவேண்டும்போல்
எண்ணம் எழும்.

அப்போது,
குமுறும் உள்ளத்திலிருந்து
குதித்து
பேனாவில் கருக்கட்டி
என்னைப் பார்த்துச்
சிரிக்கின்றாய்
தவழும் மழலையாய்!



கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

# மாம்பழத்துக் கன்னமோ

மாம்பழத்துக் கன்னமோ
தேன்சுவைக் கிண்ணமோ

தாம்பூலம் போடவா
தாவணிப் பூவே!
மாம்பழத்துக் கன்னமோ
தேன்சுவைக் கிண்ணமோ!

கள்ளூறும் போதையைக்
கண்டதுமே ஏத்துறியே
தள்ளாடுது மனசு
தடம் மாறுதடி வயசு!

கும்மாளம் போடத்தான்
ஜோடி சேரலாமே
தெம்மாங்கு இசையோட
சேதியொன்னு சொல்லட்டுமா?

பொத்திவச்ச ஆசையெல்லாம்
பொண்டாட்டியா வாடி உனக்கு
முத்திப்போன காதலால
முழுநிலவாத் தெரியுமடி!

உனக்காக நான் இருக்க
ஓராயிரம் வேணாமடி
எனக்கான வரமாத்தான்
என்னவளா இருவேண்டி!



ஊருல ராணியா
உலாக்கொண்டாரேன்
வேர்ல ஊன்றிய மரமா
வாழ்க்கைய நான் தாரேனே!

கவிஞர் தமிழ்நதி கிருஷ்அபி

# அவள் பேரழகி

அவளைப் பார்த்த பிறகுதான்
கண்ணாடிகள் தங்கள் வேலையைச்
சந்தேகிக்கத் தொடங்கின.

பூக்கள் அவள் கைகளில்
இடம் கிடைத்தால்தான்
தங்களை அழகென்று நம்புகின்றன.

நிலவு இரவு முழுவதும் ஒளிர்வதில்லை,
அவள் முகத்தைப் பார்த்து
ஒளியை இரவல் வாங்குகிறது.

என் கவிதைகள் அவளை
வர்ணிக்க முயற்சிக்கின்றன;
ஒவ்வொரு முறையும்
வார்த்தைகள் தோற்றுப்போகின்றன.

அவள் அருகில் நிற்கும் காற்றுக்குக்கூட
ஒரு வாசனை உண்டு.
அவள் இல்லாத என் நாட்களுக்கோ
உயிரே இல்லை.

உலகம் அவளைப் "பேரழகி" என்கிறது.

நானோ ஒரே ஒரு வார்த்தையில் அழைக்கிறேன்...
"என் உலகம்" என்று!



கவிஞர் ர. ரமேஷ் அருந்ததி, திருப்பூர்

# முகவரி மறந்த உறவுகள்



முகவரிகள் மாறவில்லை!
அகங்களில் தான்
ஆயிரமாயிரம் மாற்றங்கள்!
வாசல்தேடி நேசமுடன்
வந்திட்ட கால்கள் ஏனோ
வழிமறந்து போனதிங்கே!

பணமே வாழ்க்கையென்று
பாசங்களை மறப்போரே!
தனிமை ஒருநாள்
உமை வந்து சேர்கையில்
நேசத்திற்காக வாடும்
நிலையினைச் சேர்த்திடுமே!

ஒன்றிணைந்து வாழ்ந்தவர்கள்
இன்று தனித்தனி தீவுகளாய்!
எண்களால் இணைகின்றோம்
எப்போதாவது கைப்பேசியில்!

உறவுகள் தொடரும்
வேர் இழந்த மரமாய்,
உலர்ந்து போகிறது
நம் உறவுமுறை!

சிரித்த முகங்கள் எல்லாம்
குறுஞ்செய்தி வழியாக
சுருங்கிவிட்டன இந்நாளில்!
நேரமில்லை என்பதே
பெரும்பாலும் பதிலாக!

அன்பெனும் நீரூற்றி
இணைத்திடுவோம் இதயங்களை!
முகவரி தேடும்
அஞ்சல்கள் போல
முகமறியா மனிதர்களாய்
வாழ்தலைத் தவிர்த்திடுவோம்!

பண்டிகை நாளில்
கொண்டாட்டங்களே
இன்னும் உறவுகளை
இணைக்கின்ற காரணியாய்!

மறந்த முகவரியை
மீண்டும் தேடுவோம்!
உறவுகளைப் புதுப்பித்து
மாற்றங்களை மறந்து
மனிதனாய் வாழ்வோம்

காயங்களை ஆற்றும்
மருந்தான கனிவான
வார்த்தைகளுக்குப் பஞ்சம்!
வாடிடும் நெஞ்சம்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

மனோ திடம்
என்பது
மலையை சாய்ப்பதல்ல
சிறு துரும்பும்
உறுத்தாமல்
பார்த்துக் கொள்வதே



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# ஆயுள் கைதி

அவன்மீது கொண்ட தீராத காதலால்
அவனிடமே ஆயுள் கைதியானேன்!

இதயத்தைத் தைத்த வார்த்தை அம்புகளால்
ஏற்பட்ட ரணங்களை.

கன்னத்தில் சத்தமின்றி முத்தமிட்டு
என்னை ஆற்றியது என் விழிநீர் முத்துக்கள்!

இதழோரப் புன்னகையில்
இரு இதயங்கள் சங்கமிக்கின்றன
ஆறும் கடலும்போல்




கவிஞர் ரிஸ்வானா நாஜீன், மாத்தளை (இலங்கை)

# உணர்ந்தோம் உனையே

நீயில்லையே என்று
மனவலியுடன்
ஓர் நிகழ்வு.

நானின்றி நீங்களேது என்று
மழைத்துளியாய்
உங்கள் ஆசீர்வாதம்.

அருவமாய் உணர்ந்தோம்
கண்கலங்கக் காற்றில்
உனைத் தேடினோம்.

தென்றலாய் உங்கள் தீண்டல்.
மன அமைதி கொண்டோம்.
நீங்களின்றி நாங்களேது.

மனதின் அலைபாயுதல்
அமிழ்ந்துவிட்டது.

இப்போது உணர்வாய்.

கொஞ்ச நாளில் உடலாய்
உயிராய்
எங்களுடன் நீங்கள்.




கவிஞர் சுமதி தசரதன்

# அடைக்கலம்

அடைக்கலம் என்று
வந்தோர் அனைவரும்
அவனை அடைந்து
அவலம் நீத்தார்.
அவர் தகுதி நோக்கான்;
அன்பினால் தன்
தகுதி ஒன்றே தேர்வான்

படகோட்டும் குகனும்,
சுக்ரீவ ராசனும்,
அசுர விபீடணும்,
ஒன்றே;அந்தப்
பரமார்த்த பரபிரும்மத்திற்கு.

சிரக்கம்பம் வைத்து
இறைஞ்சிய பாஞ்சாலியும்,
ஒன்றுமே கேளாத
வறியவன் குசேலனும்
கண்ணன் கண்ணுக்கு
ஒன்றே நிகர்.
பக்த அம்பரீசனும்,
பிரஹலாத சிறுவனும்,
உத்தவனும், விதுரனும்,
வீட்டுமனும்,அவன் கழலே
நிழல் என்ற கொண்டு
வென்றார் பரமபதம்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# மறந்தும் மரத்தும்

ஒருவருள் ஒருவர்
புகுந்து உணர்ந்து,
ஒன்றாக வேண்டியே
அவள் வந்தாள்.

நீ அன்பெனும் வேலி தாண்டி,
அவள் ஆசைகளைச்
சிறைப்படுத்தினாய்.

குளிர்நீரில் குதிக்கும்
ஆமைபோல முதலில்
அவள் அகமகிழ்ந்தாள்.
நாள்கள் போகப் போக,
நரகத்தில் ஆட்பட்டாள்.

சர்க்கரைப் பாகினிலே
மூழ்கிக் கிடப்பதைப் போல,
அவளுக்குத் திகட்டியது.

அவள் அறையின்
அனைத்துச் சாளரங்களும்
மூடப்பட்டுவிட்டன.

உன் அறையில் உள்ள
ஒரே ஒரு சன்னல் வழிதான்
அவள் பார்க்கும் நிலையானது.




ஆனால், அவள் யார் என்பதே
அவளுக்கு மறந்துபோக,
எல்லாம் மரத்துப்போக,
அவள் உதிரத் தொடங்கினாள்.

கவிஞர் வளவ. துரையன், முகவிலாக்கம்

### 1. நீ இல்லை என்றால்

சமயங்களில் எண்ணியது
முழுவதும் நடக்காமல்
போகலாம்
பாதி தூரம் வரை
மட்டுமே சென்று இருக்கலாம்

ஆரம்பித்துச் சிறிது தூரம் வரை
கடந்திருக்கலாம்
ஏன் எண்ணங்களே
தவறாய்ப் போயிருக்கலாம்
'எதிர்பார்ப்பில்'

ஆனால்
அவர் இல்லை என்றால்
நிகழ்காலம்
சுவாரசியப்படுத்தாது

இன்றைய சோகத்திற்கு
ஆறுதல் கிடைக்காது

இலக்குகள் இல்லாமல் போகும்
செயல்பாடுகள்
செயலற்றுப் போகும்

நாளையவை நம்பிக்கை
கொடுக்காது
எதிர்காலம் பற்றிய எண்ணம்
உயிர்ப்புடன் இருக்காது
**************************



### 2. அப்பவே ஆரம்பம்

உதட்டு மொழிக்கு
செயலுக்கு முடிவுக்கு
சமையலுக்கு ஆலோசனைக்கு
படைப்புக்கு ஆடைக்கு
சுற்றுலாவுக்கு

"நான் ஒன்னு சொன்னா
தப்பா எடுத்துக்க மாட்டாயே?" எனில்

வருத்தத்திற்கோ பதிலுரைக்கோ
வாக்குவாதத்திற்கோ எதிர்வினைக்கோ
தயாராக வேண்டியது
புத்தியும் மனதும் என அர்த்தம்

அத்தியாயம் -1

# ரோஜாப் பூக்கள்

திகில் நவீனம்

அழகான வானவெளியில் சூரியன் வேகமாக கதிர்களை வீசிக் கொண்டே முன்னேறிக்கொண்டிருந்தான். மேகங்கள் அவன் கைகளுக்குள் மாட்டாமல் கண்ணாமூச்சிக் காட்டிக் கொண்டிருந்தது.

அருண் பஸ்ஸிலிருந்து இறங்கி வேகமாக குர்லா ரயில்வேஸ்டேஷனுக்குள் நுழைந்து ஹார்பர் லைனில் வரும் குர்லா லோக்கல் ரயிலில் வருகின்ற எட்டாவது பிளாட் பாரத்தில்வந்து நின்றான். ஸ்டேஷன் மணிக்கூண்டில் நேரம் 9.30 என்றது.

'குர்லா லோக்கல் ரயில் 9.40க்குத் தானே புறப்படும்' என்று எண்ணிய வாறு அருகிலிருந்த கான்டீனில் "ஏக் சாய் தோ" என்று ஐந்து ரூபாய் எடுத்துக் கொடுத்து சாயா வாங்கி உறிஞ்சிக் குடித்தான்.

மக்களெல்லாம் காலிலே சக்கரங்களைக் கட்டிக் கொண்டு பறந்தார்கள். எக்ஸ் பிரஸ் ரயிலில் மக்கள் வெள்ளம் பிதுங்கி வழிந்தது. எங்கோ தீ பிடித்தது போல அடித்துப் புரண்டு ஓடும் மக்கள்... ஐந்து நிமிடம் பிந்தி போனால் என்னாகி விடும் என்று கருதவே முடியாத படி ஓடும்.. படிகளில் இறங்கும் ஆண்கள்..... பெண்கள்...... இரயில் நிலையம் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது.

'இன்று எப்படியேனும் ஆபீஸில் பிரமோஷனைப் பற்றிக் கேட்க வேண்டும். நமக்கு பிந்தி வந்த சுரெஷிற்கு எப்படி எக்ஸிக்யூட்டிவ் போஸ்ட் கொடுக்கலாம்' என்று மேனேஜரிடம் கண்டிப்பாக கேட்க வேண்டும். வீட்டிற்கு வாழ்த்துக்கடிதம் எழுத வேண்டும் என்று யோசித்துக் கொண்டே கையிலிருந்த பிரிப்கேசைத் திறந்து சிகரெட்டும் லைட்டரும் எடுத்துக் கொண்டு ஒரு ஃபோர் ஸ்குவரைப் பற்ற வைத்தான் அருண்.

சிகரெட் குடிக்க அனுமதி இல்லாதத்தால், ஒரு தூண் மறைவில் நின்று கொண்டு புகையை இழுக்க ஆரம்பித்தான்.

இந்த மாதிரி ஆபீஸ் நேரங்களில் கனக் கூட்டம் பம்பாயில் எல்லா இரயில் நிலையங்களிலேயுமே பொங்கி வழியும். நேரம் போகாமல் கையிலிருந்த வாட்சைத் திருப்பி பார்த்தான். மணி 9:38.36 என்றது. டிஜிட்டல் கடிகாரம்.

நேரப் போக்கிற்காக சுற்றி நின்றக் கூட்டத்தை ஒரு முறை சுவாரஸியமில்லாமல் கண்களால் அளைந்தான். எங்கும் அவசரமாக மக்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சல்வார் கம்மீஸ்கள் அவர்களுடைய பாய் பிரண்டைப் பற்றியும் நாளைக்கு வாங்கப் போகும் புது டிசைன் வளையல்கள் பற்றியும் பேசிக் கொண்டு ரயில் வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தார்க்ள். பேகி பான்ட் போட்டிருந்த ஒரு குரூப் மாணவர் சைட் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வயதானப் பெண் அந்தக் கூட்டத்தை முறைத்துப் பார்த்து விட்டுத் திட்டிக் கொண்டே போனாள். இரண்டு ஆபீஸர்கள் ரயில் நேரத்திற்கு வராததால் இரயில்வே டிபார்மென்டையே நார் நாராகக் கிழித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் இருவர் தேவிலால் எப்படி ராஜினாமா செய்யலாம்? என்று விவாதித்துக் கொண்டுருந்தார்கள்.

ஒரு பிச்சைக் கார சிறுவன் வயிற்றைத் தட்டிக் கொண்டே தலையோடு கறுப்புத் துணியால் மூடியிருந்த அந்த முஸ்லீம் பெண்ணிடம் பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அந்த நேரம் தான் அந்தப் பெண் வேகமாக.... மிக வேகமாக ஓடி வந்து பெண்கள் நிற்கின்ற பகுதிக்குப் போய் யாராவது வருகிறார்களா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் கிலோக் கணக்கில் பயம் சுமந்து கொண்டிருந்தது. அந்தக் கண்கள் யாரும் தன்னைப் பார்த்து விடக் கூடாது என்று அடிக்கடி அந்தப் பெண்களின் கூட்டத்தில் குனிந்து கொண்டாள்.

அருணுக்கு அந்தப் பெண்ணை பார்ப்பதற்கு சுவாரசியமாக இருந்தது. இவ்வளவு பேர் நிற்கும் ரயில் நிலையத்தில் இவள் ஏன் பயந்து கொண்டிருக்கிறாள்? என்று ஆச்சரியமாக இருந்தது.

இப்போதுதான் அவளைக் கூர்ந்து கவனித்தான். மஞ்சள் நிறத்தில் சேலை கட்டியிருந்தாள். அதில் ரோஜாப் பூக்கள் வாரி இறைக்கப் பட்டிருந்தன. அதற்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் கறுப்பு நிற சட்டை அணிந்திருந்தாள். முகத்தில் ரோஸ் பவுடர் போட்டு கன்னம் கொஞ்சம் மென்மையாக சூரிய ஒளியில் மின்னிக் கொண்டிருந்தாள்.

இப்போது தான் அவள் கையிலிருந்த அந்தப் பொருளைக் கவனித்தேன். ஒரு வீடியோ கேசட் இருந்தது. இவன் தன்னையே கவனிப்பதாக உணர்ந்த அந்தப் பெண் கொஞ்சம் தள்ளி நின்று இவன் கண்ணிற்கு தென்படாமல் பெண்கள் கூட்டத்திற்குள் போய் நின்று கொண்டாள்.

குர்லா லோக்கல் ரயில் வர சி.எஸ்.டி. ஸ்டேஷனுக்கு அருகில் வேலைக்குப் போகும் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள். ஏறியதும் இருப்பதற்கு இடம் தேடினார்கள். ரயில் வந்ததும் அந்தப் பெண்ணை முழுவதுமாக வேகமாக மறந்து விட்டு ரயில் ஏறி இடம் பிடித்து அமர்ந்தான்.

'பம்பாய்க்கு வந்த பிறகு எனக்குக் கூட சுறு சுறுப்பு தொற்றிக் கொண்டது'. என்று நினைத்துக் கொண்டு பெட்டியைத் திறந்து பட்டுக் கோட்டை பிரபாகரனின் 'நடுநிசி இரகசியம்' என்ற நாவலை விட்ட இடத்திலிருந்து தொடர ஆரம்பித்தான்.

அவனுக்குள் ஏதோ குறுகுறுப்பு ஏற்பட ஏதோ ஞாபகம் வந்தவனாக திரும்பவும் ரயிலின் ஜன்னல் வழியாக பெண்கள் கூட்டத்தில் அந்தப் பெண்ணைத் தேடினான். அவளைக் காணவில்லை. 'என்ன இருந்தாலும் ஒரு முறை பார்த்தவன் கண்டிப்பாக திரும்பி பார்க்காமல் போக மாட்டான்.' என்று நினைத்துக் கொண்டே புத்தகத்தை திறந்து திரும்பவும் கதையைத்

பிறப்பும் இளமையும்



தங்கம் மூர்த்தி அவர்கள் 1964 ஆகஸ்ட் 19ஆம் தேதி, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகிலுள்ள சுப்பிரமணியபுரம் என்ற சிற்றூரில் டாக்டர் கே.கே. தங்கம் — திருமதி ஜெயலட்சுமி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இளம் வயதிலேயே கவிதை மற்றும் இலக்கியத்தின் மீது ஆர்வம் கொண்டிருந்தார். பள்ளிப் பருவத்திலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். அவர் எழுதிய "மழை நேரத்து மரங்கள்" என்ற கவிதை, பள்ளி காலத்தில் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்ட முகாமில் வாசிக்கப்பட்டு பாராட்டைப் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

கல்வி

அறந்தாங்கி அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியைப் பயின்றார். பின்னர் புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் ஆங்கிலத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். தொடர்ந்து திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். மேலும் கல்வியியலில் B.Ed., M.Ed. பட்டங்களையும் பெற்றுள்ளார்.

கல்லூரிப் பருவத்தில் பேராசிரியர் இரா. பாலச்சந்திரன் (பாலா) அவர்களின் ஊக்கம் தங்கம் மூர்த்தியின் இலக்கியப் பார்வையை விரிவுபடுத்தியதாகக் கூறப்படுகிறது. அதன் மூலம் உள்ளூர் இலக்கியம் முதல் உலக இலக்கியம் வரையிலான படைப்புகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

## கவிதை உலகில் நுழைவு

தங்கம் மூர்த்தியின் முதல் நூல் "முதலில் பூத்த ரோஜா" என்ற ஹைக்கூ கவிதைத் தொகுப்பு. இது 1994ஆம் ஆண்டு வெளியானது. குறைந்த சொற்களில் ஆழமான சிந்தனையை வெளிப்படுத்தும் ஹைக்கூ வடிவம் அவருடைய கவிதை ஆளுமையின் முக்கிய அடையாளமாக மாறியது.

அவருடைய கவிதைகளில் மனித வாழ்க்கை, இயற்கை, சமூக உணர்வு, அன்பு, வலி, உறவுகள், கல்வி மற்றும் மனிதநேயம் போன்ற பல்வேறு கூறுகளைப் பார்க்க முடிகிறது. தனிமனித உணர்வுகளை மட்டும் பதிவு செய்வதைத் தாண்டி சமூகத்தின் சிந்தனையைத் தூண்டும் வகையில் கவிதைகளைப் படைத்திருப்பது அவரது படைப்புகளின் சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது.

## குறிப்பிடத்தக்க படைப்புகள்

தங்கம் மூர்த்தி பல கவிதை நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை:

- முதலில் பூத்த ரோஜா
- தங்கம் மூர்த்தி கவிதைகள்
- பொய்யெனப் பெய்யும் மழை
- தேவதைகளால் தேடப்படுபவன்
- என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து
- கவிதையில் நனைந்த காற்று
- கல்வி கரையில
- கூடு திரும்புதல் எளிதன்று
- ஹைகூ 100
- 100 கவிஞர்கள் 100 கவிதைகள்



இந்நூல்களில் பலவும் கவிதை இலக்கியத்தில் அவரது நீண்டகாலப் பயணத்தையும் பல்வேறு படைப்புத் தளங்களையும் வெளிப்படுத்துகின்றன.

### ஹைக்கூ கவிதைகளின் சிறப்பு




தங்கம் மூர்த்தியின் படைப்புகளில் ஹைக்கூவுக்கு முக்கியமான இடம் உண்டு. அவரது ஹைக்கூ கவிதைகள் "மழையின் கையெழுத்து" என்ற பெயரில் ஆங்கிலத்தில் "Sign of Rain" என மொழிபெயர்க்கப்பட்டும் வெளியாகியுள்ளன.

சிறிய அளவில் எழுதப்பட்டாலும், வாசிப்பவரின் மனதில் பெரிய சிந்தனையை உருவாக்குவது ஹைக்கூவின் இயல்பு. அந்த வகையில் அன்றாட வாழ்க்கைக் காட்சிகளுக்குள் மறைந்திருக்கும் மனித உணர்வுகளையும் சமூக உண்மைகளையும் தங்கம் மூர்த்தி கவிதைகளில் வெளிப்படுத்துகிறார்.

### சமூகப் பார்வை

தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் சமூக அக்கறை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. நெல்சன் மண்டேலா சிறையில் இருந்த காலகட்டத்தை மையமாகக் கொண்டு அவர் எழுதிய கவிதை இலக்கிய வட்டாரத்தில் கவனம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

அவருடைய கவிதைகள் தனிமனித உணர்வுகளுடன் நின்றுவிடாமல், சமூகம், மனிதநேயம், சமத்துவம், கல்வி போன்ற பரந்த தளங்களையும் தொட்டுச் செல்கின்றன.

**இலக்கியப் பங்களிப்பு**

தமிழகம் முழுவதும் பல்வேறு கவியரங்குகள் மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுள்ள தங்கம் மூர்த்தி, இந்தியாவின் பல பகுதிகளிலும் இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளார். வெளிநாடுகளிலும் கவியரங்க நிகழ்ச்சிகளுக்குத் தலைமை ஏற்றும், இலக்கிய விழாக்களில் சிறப்பு அழைப்பாளராகவும் கலந்து கொண்டுள்ளதாகப் பதிவுகள் தெரிவிக்கின்றன. மேலும், அவரது கவிதைகள் ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், பிரெஞ்சு, மலாய் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**"100 கவிஞர்கள் 100 கவிதைகள்"**

தங்கம் மூர்த்தியின் இலக்கியச் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க முயற்சிகளில் ஒன்று "100 கவிஞர்கள் 100 கவிதைகள்" என்ற தொகுப்பு. 100 கவிஞர்களின் கவிதைகளை ஒரே தொகுப்பில் அறிமுகப்படுத்தும் இந்நூல் 2021ஆம் ஆண்டு வெளியானது; 144 பக்கங்களைக் கொண்டதாகப் பதிப்பகத் தகவல் குறிப்பிடுகிறது.

**நிறைவாக**

கவிஞர் தங்கம் மூர்த்தி அவர்கள் கவிஞர் மட்டுமல்ல; கல்வியாளர், எழுத்தாளர், இலக்கியச் செயல்பாட்டாளர் மற்றும் இளம் தலைமுறையினரிடம் இலக்கிய ஆர்வத்தை வளர்க்கும் பணியில் ஈடுபட்டவர். புதுக்கோட்டை மண்ணின் வாழ்வியல் அனுபவங்களையும் மனித உணர்வுகளையும் எளிய, அழகான தமிழில் கவிதைகளாகப் பதிவு செய்து வருகிறார்.

நாளை

# நமதே

அன்பு என்பது வார்த்தையல்ல;

பிறருக்காக நம்மை அர்ப்பணிக்கும்

உயர்ந்த பண்பு

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே  முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு  அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு  சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com